**OS.NO.46 /2014 PW-1**

நாள் : 28.06.2023

பெயர்: விஜயரங்கம்

த/பெ : சண்முகம்

**5ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி -**

1. சர்வே எண்.243/2ல் மொத்த விஸ்தீரணம் 1.90 சென்ட் தான் என்றால் மொத்த விஸ்தீரணம் எனக்கு தெரியாது. என் அனுபவத்தில் உள்ளது 57 சென்ட் ஆகும். எ ரிஜிஸ்டரில் பரப்பொடி மற்றும் மோடி என்பவர் பேரில் சர்வே எண். 243/2 -வில் மொத்த விஸ்தீரணம் உள்ளது என்றால் இல்லை. உங்களுக்கு சொத்தை விற்ற கெங்கன் என்பவரின் தந்தை பெயர் சின்ன பையன் என்ற அண்ணாமலை என்றால் ஆமாம். செய்யார் சட்டமன்ற தேர்தலில் கொடுக்கப்பட்ட அடையாள அட்டையில் கெங்கன் என்பவரின் அப்பா பெயர் அண்ணாமலை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். நீங்கள் சொல்வது போல் சின்னபையன் என்ற வேறொரு பெயர் அண்ணாமலைக்கு இல்லை என்றால் சின்னபையன் என்ற அண்ணாமலை தான். மீனா மற்றும் செல்லம்மா என்பவர்கள் கெங்கன் என்பவருக்கு எழுதிக்கொடுத்த அக்கு விடுதலை பத்திரத்திலும் அண்ணாமலை என்ற தான் குறிப்பிடப்பட்டுள்ளது பற்றி கேட்டால் இல்லை சின்னபையன் என்ற அண்ணாமலை தான் அவரது பெயர் என்று நான் தெரிந்து கொண்டேன்.

2. நீங்கள் சொல்வது போல் கெங்கனின் அப்பா பெயர் சின்னபையன் என்ற அண்ணாமலை என்று இருந்திருந்தால் வாக்காளர் அடையாள அட்டையிலும் அவ்வாறே குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் அது சரியல்ல. நீங்களநீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள 205 என்ற எண் கொண்ட பட்டா யுடியார் பட்டா தான் என்றால் ஆமாம். அரசாங்கத்தால் வழங்கப்பட்ட பட்டாவை தான் நான் தாக்கல் செய்திருக்கிறேன் டி.சி.லேண்டு ஆகும்.

வட்டாட்சியர் அல்லது மாவட்ட ஆட்சியரிடத்தில் இருந்து அந்த இடம் டி.சி.இடம் தான் என்று சான்றிதழ் ஏதாவது பெற்றுள்ளீர்களா என்றால் இல்லை. இந்த நாள் வரை பட்டா சம்பந்தமாக பிரச்சினை இருந்து வருகிறது என்றால் இல்லை. உங்கள் பெயரில் பட்டா இருக்கிறதா என்றால் இல்லை. கெங்கனுடைய சகோதரிகள் பெயரில் பட்டா எதுவும் இல்லை என்றால் அவர்கள் பெயரில் கூட்டுப்பட்டா உள்ளது. ஏற்கனவே பட்டா எண். 205 அண்ணாமலை பெயரில் இருந்தது. அவரது மறைவிற்கு பிறகு வாரிசுதாரர்கள் என்ற அடிப்படையில் பெயர் மாற்றம் தான் செய்யப்பட்டது என்றால் பட்டா அவர்கள் பெயரில் கூட்டுப்பட்டாவாக உள்ளது அதை விசாரித்துவிட்டு தான் நான் வாங்கினேன்.

3. இந்த நிலத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு, அதனுடைய அனுபவசாலிகள் யார் யார் என்பதை பொறுத்து நீங்கள் ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். இந்த வழக்கில் 5வது பிரதிவாதி கோகுல் என்பவர் தாக்கல் செய்துள்ள பதில் உரையை படித்து பார்த்தீர்களா என்றால் அந்த நபர் யார் என்றே எனக்கு தெரியாது. அவருக்கும் நிலத்திற்கும் சம்பந்தமில்லை. இந்த வழக்கில் 5வது பிரதிவாதியாக கோகுலை சேர்த்துள்ளீர்கள் அவரை தெரிந்து சேர்த்தீர்களா தெரியாமல் சேர்த்தீர்களா என்றால் அவர் யார் என்றே எனக்கு தெரியாது. எந்த பிரதிவாதிக்கு எதிராக நிவாரணம் கேட்டு வழக்கு தாக்கல்செய்துள்ளீர்கள் என்றால் நான் நிலத்தை கிரயம் பெற்றுள்ளேன். என்னுடைய அனுபவத்திற்கு எந்த இடையூறும் வரக்கூடாது என்பதற்காக நான் வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன்.

4. நீங்கள் தான் வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் , யார் யார் மீது வழக்கு தாக்கல்செய்துள்ளீர்கள் , என்னென்ன பரிகாரம் கோரி இருக்கிறீர்கள் என்ற விவரம் தெரியாமலேயே வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் நான் சரியாக தான் தாக்கல் செய்திருக்கிறேன். கெங்கன் என்பவரிடமிருந்து நீங்கள் சொத்தை வாங்கியதாக

சொல்கிறீர்கள் அவர் அந்த சொத்தை விற்பதற்கு அருகதைஅற்றவர் என்றால் சரியல்ல. சின்னபையன் என்ற அண்ணாமலையின் மனைவி 5 ஆம் பிரதிவாதியான கோகுலுக்கு சொத்தை 24/07/1987 கிரையபத்திரம் முன்னிலைக்கு விற்றுவிட்ட காரணத்தினால் அண்ணாமலைக்கும் கெங்கனுக்கும் இந்த சொத்தில் உரிமை கோரமுடியாது என்று சொன்னால் அது சரியல்ல. நீங்கள் கிரையம் பெற்ற சொத்திற்கு பட்டா கோரி மாவட்ட ஆட்சியர் இடத்தில் மனு செய்தீர்களா என்றால் இல்லை. வா.சா.ஆ.6 நீங்கள் வேலூர் மாவட்ட ஆட்சியர் இடத்தில் பட்டா கோரி மனு செய்த ஆவணம் தான் என்றால் சாட்சி முதலில் தன்னுடைய கையெழுத்து இல்லை என்று சொல்லிவிட்டு பிறகு என்னுடைய கையெழுத்து தான் ஆனால் அந்த கடிதம் நான் எழுதவில்லை என்று சொல்கிறார். வா.சா.ஆ.6 ஆவணத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. வக்கீல் எழுதி இருக்கலாம் நான் கையெழுத்து மட்டும் செய்தேன். வா.சா.ஆ.6ல் உள்ள கடிதத்தை நீங்கள் தான் வக்கீலிடம் சென்று அனுப்ப சொன்னீர்களா என்றால் இருக்கலாம். 2014ல் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே 2013ல் வழக்கறிஞரிடம் சென்று மனு செய்யச்சொல்லி உள்ளீர்கள் என்றால் எனக்கு புரியவில்லை. நான் ரிஜிஸ்டர் ஆபீசில் விசாரணை செய்து தான் கிரையம் பெற்றேன். இதுவரை பட்டா உங்கள் பெயரில் இல்லை அது சம்பந்தமாக வருவாய்துறையினரிடம் சென்று எந்த மனுவும் செய்யவில்லை என்றால் இல்லை.

5. இந்த வழக்கு இந்த நீதிமன்றத்தில் நிலைக்கத்தக்கதல்ல என்றாலும் பட்டா சம்பந்தமான வழக்கு அனைத்தும் வருவாய்துறையிடம் முறையீடு செய்யத பிறகு தான் நீதிமன்றத்தை அணுகவேண்டும் என்று சொன்னால் அது தவறு. 5ம் பிரதிவாதி கோகுல் வருவாய்துறையினரிடம் சென்று பட்டா சம்பந்தமாக முறையீடு செய்திருந்தால் இது சம்பந்தமாக கெங்கனின் சகோதரிகளை அவர்கள் அழைத்திருந்தார்கள். அவர்கள் விசாரணைக்கு வராத காரணத்தினால் பழைய

பெயரிலேயே பட்டா பதிவாகியிருந்தது என்று சொன்னால் அது சரியல்ல. நீங்கள் இந்த வழக்கில் இடைமனு 178/2014 தாக்கல் செய்திருந்தீர்களா என்றால் ஆமாம். அந்த மனு முடிக்கப்பட்டுள்ளது ஆனால் அதில் உத்தரவானது போல நீங்கள் நடவடிக்கை மேற்கொண்டீர்கள் அதனால் ஊரில் பிரச்சினை ஏற்பட்டது என்று சொன்னால் தடை உத்தரவு நீதிமன்றத்தால் இடைமனுவில் வழங்கப்பட்டுள்ளது. இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

Typewritten to my dictation in open Court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

**Sd/- D.Naveen Durai Babu,**
District Munsif cum Judicial Magistrate,
Ranipet.